அம்பத்தூர்மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.454 /2008 RCOP: /

C/W OS.454/2008, 506/2009, 538/2009, 94/2010

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R. இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 10.12.2024 |
| பெயர் மனோகரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>பிரதிவாதி 2,4 தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. தாவா சொத்து திருவல்லிஈஸ்வரர் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். 28.05.1971ல் எனது தாயாருடன் கோவில் நிர்வாகத்துடன் வாடகை ஒப்பந்தம் ஒன்று போட்டது. இவ்வழக்கில் எனது பிராதில் தாவா சொத்தில் எனது தந்தை எனக்கும் எனது சகோதரிகளுக்கும் தாவா சொத்தில் வைத்து திருமணம் செய்து வைத்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அது சம்மந்தமாக புகைப்படம் ஆதாரம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி தானகவே முன்வந்து திருமணம் தங்களது வீட்டில் நடந்ததாக கூறினார். மேற்படி திருமணம் எங்கு நடந்தது நிறுப்பிக்க புகைப்பட ஆதாரங்கள்

சமர்ப்பிக்க வில்லை என்றால் சரிதான்.

2. எனது மனைவின் நகைகளை அடமானம் வைத்து கட்டிடம் கட்டியதாக கூறியுள்ளேன் அது சம்மந்தமான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் கூறியுள்ளதால் தான் அந்த ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல.

3, நான் ஓட்டேரியில் வைத்து சார்க் இன்டஸ்டிரிஸ் நடத்தி வந்தேன் அதனை தாவா சொத்திற்கு மாற்றியதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் பொய்சொல்வதால் தான் இவ்வழக்கில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல் இவ்வழக்கிற்கு அது சம்மந்தம் இல்லை.

4. நான் சாட்சியத்தில் குறிப்பிடும் அசல் வழக்கு எண் 120 /2001 யை நான் வாபஸ் பெற்று விட்டேன் என்று சொன்னால் இல்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியும். எனது பிராதில் மேற்படி வழக்கை 2ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டும் வாபஸ் பெற்று உள்ளேன். தாவா சொத்தில் தற்போது வரை நான் சுவாதினத்தில் இருந்து தொழில் நடத்துவதாக குறிப்பிட்டுள்ளேன் அது சம்மந்தமான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. 2006ல் இருந்து ஏப்ரல் 2008 வரை ரூபாய் 5 லட்சத்து 50 ஆயிரத்தை நான் 2ம் பிரதிவாதியிடம் கடன்வாங்கி கொடுத்தாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அது சம்மந்தமான ஆவணங்கண் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது தாயாரிடம் கொடுத்த பணத்திற்கு ரசீது வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. இவ்வழக்கானது

எனது தாயார் மற்றும் தம்பிக்கு எதிராக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் நீதிமன்ற நடைமுறைகாக தாக்கல் செய்தேன். எனது தாயாருக்கு எதிராக எந்த பரிகாரமும் தேவை இல்லை என்று சொன்னால் முதலில் சாட்சி சரிதான் என்று கூறிவிட்டு பின்னர் தவறு என்று கூறினார். எனது தாயார் தான் அடிமனையின் வாடகை தாரர் என்பதால் தான் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தேன். தாவா சொத்தின் உரிமையாளர் எனது தாயார் கிடையாது அது திருகோவில் சொத்து.

6. எனது தாயாருக்கு உரிமை இல்லாத சொத்தை அவர் யாருக்கு எழுதிகொடுக்க முடியாது என்று சொன்னால் அனுமதி பெற்று எழுதிகொடுக்க முடியும். 23.04.2008 அன்று எனக்கு கொடுத்த பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 21.07.2008 அன்று ரத்து செய்ப்பட்டது. மேற்படி ரத்திற்கு பிறகு 11.09.2009 அன்று நான் மேற்சொன்ன அதிகார பத்திரத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு ஒரு தான செட்டில்மென்ட் எழுதிகொண்டேன் என்று சொன்னால் சரிதான் மேற்படி ஆவணமானது வழக்கு எண் 120/2001ல் தீர்ப்பின் படியும், 454 /2008 ன் ஒருதலைபட்ச தீர்ப்பின் படியும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் ஆணையின் படியும் பதிவு செய்யப்பட்டது.

7. மேற்சொன்ன வழக்கு எண் 120/2001 , 454/2008 ஆகிய வழக்குகளின்தீர்ப்புகள் தள்ளுபடி செய்யப்பட்டு இரு வழக்குகளும் தற்போது நிலுவையில் உள்ளது என்றுசொன்னால் சரிதான். பின்னர் சாட்சி 120/2001 நிலுவையில் இல்லை என்று கூறினார். நான் மேலே சொன்ன மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ஆவணத்தில் தாக்கால் செய்துள்ளேன். அசல் வழக்கு எண் 120 /2001 ன் தீர்ப்பானது 1ம் பிரதிவாதிக்கு எதிராக முழுமையாக நடத்தபட்டு தீர்ப்பானது, 2ம்

பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டது.

8. 21.07.2008 அன்று எனது பெயரில் இருந்த பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டு 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு அன்றைய தினமே ஒரு அதிகார பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரியால்ல. மேற்படி விவரம் எனக்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அதிகாரத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதியும் 2ம் பிரதிவாதியும் திரு பாண்டியனும் சேர்ந்து அடிமனை வாடகை ஒப்பந்தத்தை மாற்ற கோரி விண்ணப்பம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 01.011.2008ல் இருந்து 15.11.2008 வரை மேற்படி பெயர் மாற்றம் குறித்து அனைத்து நாள்களிளும் தினசரிகளில் விளம்பர் செய்யப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. 27.11.2008 அன்று அறநிலைதுறை அதிகாரம் செயல்முறைப்படி மேற்பட்ட நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை வா.சா.ஆ 13 ஆக நான் தாக்கல் செய்துவிட்டு தற்போது தெரியாது என்று சொல்கிறேன் என்றால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது.

10. நான் தாக்கல் செய்த ஆவணத்தை பற்றி நான் தெரியாது என்று சொன்னால் சாட்சி அதற்கு நான் தாக்கல் செய்த ஆவணம் என்று காட்டினால் தான் பதில் சொல்ல இயலும் என்று கூறினார். வா.சா.ஆ13 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு ஆது தான் தாக்கல் செய்த ஆவணம் சாட்சி ஒப்புக்கொண்டார். மேற்படி ஆவணத்தில் 02.05.2008 பதியப்படாத ஆவணத்தின் அடிப்படையில் சுந்தரபாண்டியன் என்பவர் தாவா சொத்தில் இருப்பது பற்றி மேல்நடவடிக்கை எடுக்க சொல்லி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த செயல் முறை தவறு. மேற்படி செயல்

முறையில் வாடகை பாக்கி காசோலை மூலம்மேற்சொன்ன சுந்தரபாண்டியன் கட்டி ஆலய ரசீது வைத்திருப்பதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அந்த ஆவணம் போலியான ஆவணம்.

11. நீதிமன்றத்தில் சமர்பிப்பது தவறு என்றால் நான் போலியான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 13 ஆவணம் போலியானதா என்றால் அவர்கள் வைத்த ஆவணத்தை தான் நான் தாக்கல் செய்தேன். நான் பிராதில் குறிப்பிட்டுள்ள எந்த சங்கதிகள் குறித்தும் உரிய ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(பிரதி வாதி2,4 தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)